UNIVERSITY OF TORONTO
MUNK CENTRE
FOR INTERNATIONAL STUDIES
AT TRINITY COLLEGE

CENTRE FOR SOUTH ASIAN STUDIES

# வீடும் வெளியும் தமரும் பிறரும்

## நான்காவது தமிழியல் மாநாடு
## டொரன்டோ பல்கலைக்கழகம் மே 21-23 2009

தமிழ் கூறும் நல்லுலகங்களும் அவை சார்ந்த மொழியியல், பண்பாட்டு, அரசியல், பொருளியல், சமய வெளிகளும் எவ்வாறு கட்டமைக்கப்பட்டு வந்துள்ளன? அவை எவ்வாறு தமக்குள் ஒன்றித்தும் இடைவெட்டியும் உருவாகி உள்ளன? தமது பண்பாட்டு நியமங்களுக்கும் புவியியல் எல்லைகளுக்கும் அப்பால் இருந்து எத்தகைய பாதிப்புகளை அவை எதிர் கொண்டன? ஆகிய கேள்விகளை முன் நிறுத்துகிறது நான்காவது தமிழியல் மாநாடு.

இந்தக் கேள்விகளின் பின்னணியில் தமிழ் உலகங்களில் "பிறர்" அல்லது "மாற்றார்" என்போர் யாவர்? "மாற்று" என்று நாங்கள் கருதுவது எதனை? என்ற கேள்விகளும் எமது கவனத்தைக் கோருவனவாகும்.

உள்முகமாகப் பார்க்கிறபோது, சங்க இலக்கியப் பிரிப்புக்களான அகம்-புறம், கூடவே வீடு-வெளி, ஊர்-அயல், காடு-நாடு போன்றவற்றை "மாற்று" அல்லது "மற்றது" என்று குறிப்பிடலாம். வெளி முகமாகப் பார்க்கிறபோது, மற்றைய மொழிகள், மரபுகள், பண்பாடுகள், அரசியல் இயக்கங்கள் போன்றன எவ்வகையில் தமிழ் உலகங்களைப் பாதித்துள்ளன என்பதை ஆய்வு செய்வதன் மூலம் தமரும் பிறரும் எவ்வகையான ஊடாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர்? எவ்வாறு இவை இரண்டும் கட்டமைக்கப்பட்டிருந்தன என்பதை நாம் புரிந்து கொள்ள முயலலாம். இதன் தொடர்ச்சியாக எங்களுடைய ஆய்வு நோக்கு, பின்வரும் கேள்விகளை நோக்கித் திரும்ப முடியும்.

1. தமிழ்க் கோட்பாட்டு மரபில் பிறர்/மாற்றார் மற்றது என்பதைக் கட்டியெழுப்பிய மூலங்கள் எவை?

2. காலனி ஆதிக்கத்தின் போதும் பின்னர் நவீன மயமாக்கத்தின் போதும் தமிழுலகங்கள் மீது படிந்த புதிய அறிவொழுக்கங்கள் ஏற்படுத்திய மாற்றங்கள் எவை?

3. ஆரம்பத்தில் வணிகத்துக்காகக் கடல் கடந்த போதும் பிற்பாடு இனப்படுகொலைகளின் விளைவாகப் புலம் பெயர்ந்து புகலிடங்களை நாடிய போதும் தமிழ் மக்கள் எதிர் கொண்ட பிறர்/மாற்றார் யாவர்? அவர்களைத் தமிழ் மக்கள் எத்தகைய எண்ணக்கோலங்களால் சித்திரிக்க முயன்றார்கள்? இவை புகலிடத் தமிழ் மக்களின் சிந்தனையிலும் வாழ்விலும் ஏற்படுத்திய மாற்றங்கள் யாவை?

ஆய்வுக்கட்டுரை சமர்ப்பிக்க விரும்புபவர்கள் தமது கட்டுரையின் பொழிப்பை 300 சொற்களுக்குள் எழுதி அனுப்ப வேண்டும். முடிவு நாள்: ஓகஸ்ட் 31, 2008.

**மேலும் விவரங்களுக்கு எங்கள் இணையத்தளத்தை நாடுங்கள்:**
www.tamilstudiesconference.ca
**முகவரி:** tamilstudiesconference@gmail.com

**அமைப்புக்குழு:**
பேராசிரியர் செல்வா கனகநாயகம்
பேராசிரியர் சேரன்
கலாநிதி தர்ஷன் அம்பலவாணர்


1 Devonshire Place, Toronto, Ontario, M5S 3K7 Canada
Tel: (416) 978-4294 Fax: (416) 978-8744 Email: south.asian@utoronto.ca Web site: http://www.sgs.utoronto.ca/sas